ஒரு காட்டின் கதை

1



2

3



4



5

6

ד

8

9



10

11



12

13

ஒரு காட்டின் கதை



சூரி ஒரு வயதான யானை. அது ஒரு காட்டில் வாழ்ந்து வந்தது. ஒருநாள், அது கவலையாக இருந்தது.



பக்கத்தில் விளையாடிக்கொண்டிருந்த யானைக்கன்றுகள் “தாத்தா, ஏன் கவலையாக இருக்கிறீர்கள்?” என்று கேட்டன.



அதற்குச் சூரி “நான் உங்களைப்போலச் சிறியவனாக இருந்தபோது இந்தக் காடு இப்படி இல்லை,” என்று சோகமாகச் சொன்னது.



“தாத்தா, முன்பு காடு எப்படி இருந்தது?” என்று கீது கேட்டது.



“முன்பு காட்டில் பெரிய மரங்கள் இருந்தன. அங்குப் பல வண்ணப்பறவைகளும் விலங்குகளும் வாழ்ந்து வந்தன.”

“காட்டில் அடிக்கடி மழை பெய்தது. அதைக் கண்டு விலங்குகள் மகிழ்ச்சியில் கூத்தாடின.”



“இப்போது, ஏன் அடிக்கடி மழை பெய்வதில்லை. அந்த விலங்குகள் எங்கே?” என்று லூனா கேட்டது.

“மனிதர்கள் பெரிய இயந்திரங்களைக் கொண்டுவந்து மரங்களை வெட்டினார்கள். இயந்திரங்களின் சத்தத்தைக் கேட்ட விலங்குகள் பயந்து ஓடிவிட்டன.”



“மரங்கள் இல்லாததால் மழை அதிகம் பெய்யவில்லை. அதனால், ஆறு வறண்டுவிட்டது,” என்று சூரி சொன்னது. அதைக்கேட்டு யானைக்கன்றுகள் அதிர்ச்சி அடைந்தன.



“நமது காடு மீண்டும் பழையபடி மாறுமா?” என்று சின்னு கேட்டது.



சூரி தூரத்திலிருந்த புதிய மரக்கன்றுகளைக் காட்டியது.



“அதோ பாருங்கள், மனிதர்கள் சிலர் நமது காட்டில் புதிய மரக்கன்றுகளை நடுகிறார்கள். இதனால், நமது காடு மீண்டும் பழையபடி மாறும் என்று நம்புவோம்,” என்று சூரி சொன்னது.



யானைக்கன்றுகள், காட்டில் மீண்டும் நிறைய மரங்கள் வளரும்; அவை விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் வீடாகும் என்ற நம்பிக்கையோடு இருந்தன.

எழுதியவர்: திருவாட்டி ரிஸ்வானா தஸ்னீம்

தமிழ் வளர்ச்சிக்குழு
Tamil Promotion Committee